# தாராபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கனிமொழி இராஜாத்தி கருணாநிதி எம்.பி. பிரச்சாரம்!



மதுராந்தகம் சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தல் - 2026 தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சியின் கழக வேட்பாளரான இ.பரந்தாமனை ஆதரித்து கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி இராஜாத்தி கருணாநிதி, எம்.பி., அவர்களின் தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்

**நாள் : 30.09.2026**

| வ.எண் | நேரம் | இடம் |
|---|---|---|
| 1. | மாலை 4.00 மணி | கருங்குழி – மகளிர் சந்திப்பு |
| 2. | மாலை 5.00 மணி | மதுராந்தகம் (கடப்பேரி) வேன் பிரச்சாரம் |
| 3. | மாலை 6.00 மணி | சரவம்பாக்கம் வேன் பிரச்சாரம் |
| 4. | மாலை 7.00 மணி | பெரும்பேர்கண்டிகை மகளிர் கூட்டம் |
| 5. | இரவு 8.00 மணி | கீழ்அத்திவாக்கம் கூட்டுச்சாலை (வேன் பிரச்சாரம்) |

``அண்ணா அறிவாலயம்'' ,
சென்னை18.
நாள்: 25.09.2026

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

## தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாருக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் வழக்கு!

புதுடெல்லி, செப். 26-

தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாருக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளில் பல்வேறு முக்கிய முடிவுகளை தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் தன்னிச்சையாக எடுத்துள்ளார். தங்களின் கவனத்திற்கு வராமலேயே ஞானேஷ்குமார் முடிவுகளை எடுத்ததாக இரண்டு தேர்தல் ஆணையர்கள் குற்றம் சாட்டியது நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாரை பதவிநீக்கம் செய்யக்கோரி போராட்டங்கள் வெடித்துள்ளன. இந்த நிலையில், ஞானேஷ்குமாருக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

ஞானேஷ் குமார் எடுத்த முடிவுகள் அனைத்தும் சட்டவிரோதமானது என்று அறிவிக்க வேண்டும் என்று மனுவில் கோரப்பட்டுள்ளது. ஃபாரம் 6ல் மேற்கொண்ட மாற்றம் உள்ளிட்ட அனைத்து உத்தரவுகளையும் ரத்து செய்ய வேண்டும், 13 கோடி வாக்காளர்கள் நீக்கப்பட்டது குறித்து சிறப்பு புலனாய்வு குழு அமைத்து விசாரணை நடத்த உத்தரவிட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார், துணை தேர்தல் ஆணையர் மனிஷ் கார்க், தேர்தல் ஆணையத்தின் தகவல் தொழில்நுட்ப பிரிவு தலைவர் சீமா கன்னா ஆகியோர் மீது வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் உச்சநீதி மன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தாராபுரம் (தனி) தொகுதி இடைத்தேர்தல்! திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி பிரச்சாரம்!



**நாள் : 29.09.2026 - (செவ்வாய்க்கிழமை)**

| நேரம் | ஒன்றிய/நகர/பேரூர்க் கழகங்கள் | இடம் |
|---|---|---|
| மாலை 5.00 | மூலனூர் பேரூர் | மூலனூர் (வடுகபட்டி பிரிவு) |
| மாலை 7.00 | தாராபுரம் நகரம் | தாராபுரம் (அண்ணா சிலை) |

**தேர்தல் பணிக்குழு**
**101 - தாராபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதி**

## ஜனநாயகத்திற்கு கட்டப்பட்ட சமாதி:

# தேர்தல் ஆணையத்தின் வரலாறு காணாத வாக்குத் திருட்டு மோசடி!

ஜனநாயகத்தில் மக்கள் அளித்த தீர்ப்புகள் மாற்றப்பட்ட வரலாறு உண்டு. ஆனால், ஜனநாயகமே திருடப்பட்ட ஒரு வரலாற்று கொடுமையைத்தான் இன்று இந்த நாடே பார்த்துக் கொண்டிருக்கிறது.

சர்வாதிகார நாடுகளில் தேர்தல்கள் முடக்கப்படுவது வழக்கமானது. ஆனால், ஜனநாயகம் நடைமுறையில் இருக்கும்போதே, தேர்தல்களை முற்றிலும் அர்த்தமிழக்கச் செய்யும் மாபெரும் மோசடி இங்கு அரங்கேறியிருக்கிறது.

ஒரு நாட்டில் ஜனநாயகம் உயிர்ப்புடன் இருக்கிறது என்பதற்கு இரண்டு அடிப்படை அஸ்திவாரங்கள் உள்ளன:

1. அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் அரசியல் சாசனம் (Constitution).

2. மக்கள் தங்களது ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுக்கும் வாக்குரிமை (Right to Vote).

இந்த இரண்டில் எது ஒன்று வீழ்ச்சியடைந்தாலும், அந்த நாட்டை "ஜனநாயக நாடு" என்று அழைப்பது முற்றிலும் அர்த்தமற்றதாகிவிடும்.

ஏற்கெனவே, ஒன்றிய பாஜக அரசினால் நமது அரசியல் சாசனம் கடுமையான தாக்குதலுக்கு ஆளாகி வருகிறது. அரசியல் சாசனம் வழங்கிய உரிமைகளையும் சட்டப்பூர்வமான பாதுகாப்புகளையும் பல்வேறு வழிகளில் மீறி வருவதுடன், அதன் அடித்தளங்களையே தகர்க்கும் முயற்சிகளும் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

இப்போது, மக்களின் வாக்குரிமை அடிப்படையில் அரசியல் அதிகாரம் தீர்மானிக்கப்பட வேண்டும் என்ற ஜனநாயகத்தின் முதன்மை கோட்பாட்டின் மீதே, பாஜக அரசு தேர்தல் ஆணையத்தின் (Election Commission) மூலமாக ஒரு 'சர்ஜிகல் ஸ்டிரைக்'கை (Surgical Strike) நிகழ்த்தியுள்ளது.

சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணி (Special Intensive Revision - SIR) என்ற பெயரில், பீகாரில் ஜூன் 2025-ல் தொடங்கப்பட்ட இந்த நடவடிக்கை, 30 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் வரைவு வாக்காளர் பட்டியல்களிலிருந்து 13 கோடிக்கும் அதிகமான பெயர்களை நீக்கியுள்ளது. இது நாட்டின் மொத்த வாக்காளர்களில் சுமார் 14 சதவீதமாகும். இந்த சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தப் பணியின் மூலமாகத்தான், பாஜகவை கடுமையாக எதிர்க்கும் பல மாநிலக் கட்சிகளும் அதன் தலைவர்களும் திட்டமிட்டு வீழ்த்தப்பட்டிருக்கிறார்கள்.

### தேர்தல் ஆணையர்களின் எதிர்ப்பும் மூடி மறைக்கப்பட்ட உண்மைகளும்

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' (Indian Express) நாளிதழின் செய்தியாளர் ரித்திகா சோப்ரா சில தினங்களுக்கு முன்பு வெளியிட்ட கட்டுரை, நாடு முழுதும் பெரும் பூகம்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 10 மாதங்களில் தேர்தல் ஆணையத்தின் 14 முடிவுகளுக்கு, தேர்தல் ஆணையர்கள் சுக்பீர் சிங் சாந்து மற்றும் விவேக் ஜோஷி ஆகியோர் கடுமையான ஆட்சேபனை தெரிவித்தனர். ஆனால், அதை மீறி தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் எதேச்சதிகாரமாகச் செயல்பட்டு, கோடிக்கணக்கான மக்களின் வாக்குரிமையைப் பறிக்கும் செயல்களை மேற்கொண்டார் என்பதுதான் அந்தக் கட்டுரையின் சாராம்சம்.

அதில் இடம்பெற்றுள்ள முக்கியமான இரண்டு மோசடிகளை பார்ப்போம்:

### 1. படிவம் 6 மோசடி

கடந்த ஜூலை மாதத்தில், புதிய வாக்காளர்களுக்கான 'படிவம் 6'-ல் (Form 6) எஸ்.ஐ.ஆர் (SIR) தொடர்பான கேள்வி ஒன்று புதிதாகச் சேர்க்கப்பட்டது.

விண்ணப்பதாரரின் பெயர் அல்லது அவரது பெற்றோர், தாத்தா, பாட்டி ஆகியோரின் பெயர் கடந்த எஸ்.ஐ.ஆர் வாக்காளர் பட்டியலில் இருந்ததா என்பது குறித்த தகவல்கள் கோரப்பட்டன. அவ்வாறு இருந்தால், சம்பந்தப்பட்ட சட்டப்பேரவைத் தொகுதி, வாக்குச்சாவடி மற்றும் வரிசை எண் போன்ற விவரங்களை வழங்க வேண்டும் என இணையவழி விண்ணப்ப நடைமுறை குறிப்பிட்டது.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முந்தையை இந்தத் தகவல்கள் எல்லாம் சாதாரண மக்களிடம் எத்தனை பேரிடம் இருக்கும்? இல்லாத ஒன்றைக் கேட்பதன் மூலம் இலட்சகணக்கானோர் வாக்குரிமையை பறித்தார்கள். இது குடியுரிமை திருத்தச் சட்ட அமலாக்கத்தின் ஒரு கொடூரமான முன்னோட்டம்

இந்தத் தகவல்களைத் தர முடியாத காரணத்தால், ஒவ்வொரு மாநிலத்திலும் லட்சக்கணக்கானோர் வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டனர். அல்லது அவர்களை நீக்க வேண்டும் என்பதற்காகவே திட்டமிட்டுக் கொண்டுவரப்பட்ட சதி இது. "சட்டத்தைத் திருத்தாமல் இதனைச் செய்ய முடியாது" என்று மே மாதத்தில் இரு ஆணையர்களும் கூறியிருந்த போதிலும், அந்த மாற்றம் எதேச்சதிகாரமாகச் செய்யப்பட்டது.

### 2. மேல்முறையீட்டு வாய்ப்பு எனும் நாடகம்

வாக்களர் பட்டியலில் பெயர் நீக்கப்பட்டாலும் ஆவணங்களுடன் மேல் முறையீடு செய்து சேர்த்துக்கொள்ளலாம் எனக் கூறப்பட்டது.

- **கோவா:** உள்ளூர் அதிகாரிகளால் 97 வாக்காளர்கள் தகுதியுடையவர்களாகக் கண்டறியப்பட்டும், அவர்களின் பெயர்கள் மையப்படுத்தப்பட்ட மென்பொருளில் (Centralized Software) சேர்க்கப்படவில்லை.
- **மேற்கு வங்கம்:** எஸ்.ஐ.ஆர் நடவடிக்கையின் கீழ் 60.06 லட்சம் வாக்காளர்களின் தகவல்களில் முரண்பாடு உள்ளதாகக் கண்டறியப்பட்டது. இது தொடர்பான மேல்முறையீட்டில், 27.16 லட்சம் பேரை நீக்க நடுவர் மன்றம் உத்தரவிட்டது. இவர்களில் 22.21 லட்சம் பேர் பெயர்களை மீண்டும் சேர்க்கக் கோரி மேல்முறையீடு செய்துள்ளனர்.
- **டெல்லி:** டெல்லி எஸ்.ஐ.ஆரில் 47.56 லட்சம் வாக்காளர்கள் வரைவுப் பட்டியலில் இடம்பெறவில்லை. 31.63 லட்சம் பேருக்கு முரண்பாடு உள்ளதாக நோட்டீஸ் அனுப்பப்பட்டிருந்தது. "இது இயந்திரத்தனமாக வழங்கப்பட்டதா?" என உச்ச நீதிமன்றமே (Supreme Court) கேள்வி எழுப்பியிருந்தது.

மென்பொருளை உள்ளூர் அதிகாரிகளால் அணுக முடியாத நிலை மற்றும் வாக்காளர் பட்டியலைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் மென்பொருளின் மீதான 'மையப்படுத்தப்பட்ட கட்டுப்பாடு' குறித்தும் இரு ஆணையர்களும் கேள்விகளை எழுப்பியிருந்தனர். அதாவது எங்கோ இருக்கும் ஒரு மையப்படுத்தப்பட்ட அமைப்பு இலட்சகணக்கான இந்தியர்களின் வாக்குரிமையை போகிற போக்கில் வெட்டித் தள்ளியுள்ளது.

### 3. தமிழ்நாட்டில் நடந்த வாக்கு நீக்கக் கூத்து

தமிழ்நாட்டில் 96 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்ட பிறகு, திமுக எடுத்த கடும் முயற்சியின் காரணமாக அது 74 லட்சமாகக் குறைக்கப்பட்டது. ஆயினும், உள்ளூர் தேர்தல் அதிகாரிகள் வழியே சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை மீறி, ஒன்றிய அரசின் மையப்படுத்தப்பட்ட அமைப்பினால் வாக்காளர் பட்டியல் முறைகேடாகத் தயாரிக்கப்பட்டது.

நீக்கப்பட்ட 74 லட்சம் வாக்காளர்களில் குறைந்தபட்சம் தகுதி வாய்ந்த 30 லட்சம் பேராவது ஆவணங்கள் நிராகரிக்கப்பட்டோ, கொடுக்கப்பட்ட குறைந்த அவகாசத்தில் மேல்முறையீடு செய்ய முடியாமலோ அல்லது மேல்முறையீட்டின் சிக்கலான வழிமுறைகளைப் பின்பற்ற முடியாமலோ தங்களது வாக்குரிமையை இழந்திருக்கக் கூடும். இதுதான் நாடு முழுதும் நிலவும் சூழல்.

### நாடு தழுவிய எதிர்ப்பு அலை:

பா.ஜ.க அல்லாத கட்சிகள் நாடு முழுக்க இந்த விவகாரத்தில் கடும் கண்டனங்களை தெரிவித்து வருகின்றனர். இந்த சிறப்பு வாக்காளர் திருத்த மோசடியால் பயன் பெற்ற தமிழ்நாடு முதலமைச்சர் விஜய் மற்றும் ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு ஆகியோர் மட்டும் வாயைத் திறக்கவில்லை.



**மனுஷ்ய புத்திரன்**
மாநில ஆலோசகர், தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி

சிறப்பு வாக்காளர் திருத்தத்திற்கு எதிராக தொடந்து போராடி வரும் தி.மு.க தலைவர் இந்த மோசடிக்கு எதிராக தன் கடும் கண்டனங்களை தெரிவித்திருக்கிறார்

'கரப்பான்பூச்சி ஜனதா கட்சி'யின் நிறுவனர் அபிஜீத் தீப்கே இதுபற்றிப் பேசுகையில்:"2024 தேர்தலில் பா.ஜ.க. பெரும்பான்மை பெறத் தவறி 240 இடங்களுக்குச் சுருங்கியபோதே அவர்களுக்குப் பயம் தொற்றிக் கொண்டது. நாட்டின் மனநிலை மாறுவதையும், மாநிலக் கட்சிகள் வலிமை பெறுவதையும் அவர்கள் உணர்ந்தனர். அதன் பின்னரே, ஒன்றிணைந்து களமிறங்கிய எதிர்க்கட்சித் தலைவர்கள் வரிசையாகத் தோற்கடிக்கப்பட்டனர். அவர்கள் ஒருவர் பின் ஒருவராக வீழ்த்தப்பட்டனர்.

மேற்கு வங்கத்தில் மம்தா பானர்ஜி தொகுதியில் 50,000 வாக்குகள் நீக்கப்பட்டன. அங்கு மம்தா பானர்ஜி 15,000 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தார். தமிழ்நாட்டில் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தொகுதியிலிருந்து 1 லட்சம் வாக்குகள் நீக்கப்பட்டன. அங்கு ஸ்டாலின் 8,000 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தார். டெல்லியில் கெஜ்ரிவால் தொகுதியிலிருந்து 40,000 வாக்குகள் நீக்கப்பட்டன; அங்கு அவர் 5,000 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைகிறார். அதேபோல், கேரளாவில் பினராயி விஜயனும் இந்த வாக்கு நீக்க நடவடிக்கையால் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற முடியவில்லை. மு.க.ஸ்டாலின், மம்தா பானர்ஜி, பினராயி விஜயன் ஆகியோர் தோற்றது தற்செயலானது அல்ல. அதற்குப் பின்னால் பெரிய சதி உள்ளது. எதிர்க்கட்சிகளின் பலத்தைக் குறைப்பதுதான் இந்த எஸ்.ஐ.ஆர். நடவடிக்கையின் முக்கிய நோக்கம்" என்று கூறியுள்ளார்.

சிவசேனா கட்சித் தலைவர் உத்தவ் தாக்கரே மற்றும் சமாஜ்வாடி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ் ஆகியோர் தமிழ்நாடு, மேற்கு வங்கம், மகாராஷ்டிராவில் மறுதேர்தல் நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

### ராகுல் காந்தியின் இரட்டை வேடம்

காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி இந்த விவகாரம் பற்றிப் பேசுகையில், "ஹரியானா, சத்தீஸ்கர், உத்தரப் பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் ஆட்சிகள் மாறுவது வழக்கமான ஒன்றாக இருந்த நிலையில், சமீபத்திய தேர்தல்களில் மட்டும் 'ஆட்சி எதிர்ப்பு அலை' (Anti-Incumbency) என்பது திடீரெனக் காணாமல் போய்விட்டது" என்று கூறுகிறார்.

ஆனால் தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்கத்தில் சிறப்பு வாக்காளர் திருத்தத்தில் நடந்த ஜனநாயகப் படுகொலை பற்றி அவர் எந்த வார்த்தையும் பேசவில்லை. காரணம், திமுக தலைவர் தேசியத் தலைவராக அடையாளம் பெறுவதை ராகுல் காந்தியால் சகிக்க முடியாததால், விஜய்யிடம் ஓடோடிச் சென்று சேர்ந்துகொண்டார். மம்தா பானர்ஜியும், பினராயி விஜயனும், அரவிந்த் கெஜ்ரிவாலும் மாநில அரசியலில் காங்கிரசின் எதிரிகள்; எனவே அவர்கள் தேர்தல் ஆணையத்தின் தில்லுமுல்லுகளால் தோற்பதில் அவருக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை.

### த.வெ.க வென்றது எப்படி?

எல்லா தேர்தல் கணிப்புகளையும் மீறி, இப்படித்தான் தேர்தல் ஆணையத்தின் துணையுடன் த.வெ.க (தமிழக வெற்றி கழகம்) தமிழகத்தில் வென்றிருக்கிறது.

தான் நேரடியாகக் களத்தில் இருக்கும் மாநிலங்களில், பாஜக சூழ்ச்சியினால் அங்கிருக்கும் தனக்கு எதிரான கட்சிகளையும் தலைவர்களையும் வீழ்த்தியது. தான் நேரடியாகக் களத்தில் இல்லாத தமிழ்நாட்டில், தனது நிழலாக விஜய்யை முன்னிறுத்தி வென்று, இன்று தன் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறது.

யாராலும் நம்ப முடியாத த.வெ.க-வின் வெற்றியின் ரகசியம் இப்போது தெளிவாகி விட்டது. "த.வெ.க எனும் கிளியின் உயிர், இப்போது தேர்தல் ஆணையர் எனும் மந்திரவாதியின் கையில் இருக்கிறது."

### கள்ளப் பூனைக்கு மணி கட்டுவது யார்?

பா.ஜ.க. ஒன்றியத்தில் ஆட்சிக்கு வந்த பிறகு, தேர்தல் ஆணையம் முற்றிலுமாக பா.ஜ.க.வின் அடியாளாகச் செயல்பட்டு வருவது குறித்து எத்தனையோ குற்றச்சாட்டுகள் எழுந்திருக்கின்றன.

- மின்னணு வாக்குப்பதிவு இயந்திர (EVM) மோசடிப் புகார்கள்
- பா.ஜ.க.வின் விருப்பங்களுக்கு ஏற்ப பிற கட்சிகளின் பிளவுகளைக் கையாளுதல்
- பா.ஜ.க.விற்குச் சாதகமான தேதிகளில் மாநிலத் தேர்தல் தேதிகளை அறிவித்தல்
- கட்சித் தாவல் தடைச் சட்டத்தைப் பா.ஜ.க.வின் நலன்களுக்கு ஏற்ப பயன்படுத்துதல்
- ஒப்புகைச் சீட்டுகளுக்கும் (VVPAT) பதிவான வாக்குகளுக்கும் இடையிலான வித்தியாசம் குறித்த புகார்களை கண்டுகொள்ளாமல் இருப்பது
- வாக்காளர் பட்டியலில் இருக்கும் எண்ணிக்கையை விட அதிக வாக்குப்பதிவு நடைபெற்றது குறித்த புகார்களுக்கு செவி சாய்க்காதது
- கடைசி நேரத்தில் திடீரென வாக்குப் பதிவு சதவீதம் அதிகரிப்பது என தேர்தல் ஆணையத்தின் மீதான குற்றச் சாட்டுகள் கொஞ்சநஞ்சமல்ல. ஆனால், தேர்தல் ஆணையம் எதற்கும் செவிசாய்க்கவில்லை.

மாறாக, ஒன்றிய அரசு தலைமைத் தேர்தல் ஆணையரைப் பாதுகாக்கும் சட்டத்தையும் கொண்டுவந்தது. இச்சட்டத்தின் மிக முக்கியமான அம்சங்களில் ஒன்று பிரிவு 16 (Section 16) ஆகும். இதன்படி, தற்போதைய அல்லது முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் தேர்தல் ஆணையர்கள், தங்களது அதிகாரப்பூர்வப் பணிகளைச் செய்யும்போது எடுத்த முடிவுகள், பேசிய வார்த்தைகள் அல்லது செய்த செயல்களுக்காக அவர்கள் மீது எந்தவொரு நீதிமன்றமும் சிவில் (Civil) அல்லது கிரிமினல் (Criminal) வழக்குகளைத் தொடரவோ அல்லது நடத்தவோ முடியாது.

அதுமட்டுமல்லாமல், 2023-ஆம் ஆண்டு மார்ச் மாதம், உச்ச நீதிமன்றத்தின் 5 நீதிபதிகள் கொண்ட அரசியலமைப்பு அமர்வு, "தேர்தல் ஆணையர்களைத் தேர்வு செய்யும் குழுவில் பிரதமர், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர், இந்தியத் தலைமை நீதிபதி (Chief Justice of India - CJI) ஆகியோர் நியமிக்கப்பட வேண்டும்" என உத்தரவிட்டது.

ஆனால், ஒன்றிய அரசு உச்ச நீதிமன்றத் தீர்ப்பைத் தொடர்ந்து, நாடாளுமன்றத்தில் "தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் பிற தேர்தல் ஆணையர்கள் (நியமனம், சேவை நிபந்தனைகள் மற்றும் பதவிக்காலம்) சட்டம், 2023" என்ற புதிய சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றியது. இந்தச் சட்டத்தின்படி, தேர்வுக் குழுவிலிருந்து தலைமை நீதிபதி (CJI) நீக்கப்பட்டார். அவருக்குப் பதிலாகப் பிரதமர் பரிந்துரைக்கும் ஒரு மத்திய கேபினட் அமைச்சர் (Cabinet Minister) குழுவில் சேர்க்கப்பட்டார். இதற்கு எதிரான வழக்கில் இரு நீதிபதிகள் கொண்ட அமர்வு மாறுபட்ட தீர்ப்பினை வழங்கியதால், இப்போது இவ்வழக்கு தலைமை நீதிபதியின் பார்வைக்குச் சென்றுள்ளது.

வாக்குத் திருட்டுப் பூனையான தேர்தல் ஆணையத்திற்கு, ஜனநாயக சக்திகளின் மாபெரும் போராட்டமே இறுதியாக மணி கட்டும்!